**சுருக்கம்**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை – சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை – சென்னையில் உள்ள நதிகள் மற்றும் நீர்வழிகள் மறுசீரமைப்பிற்காக மாண்புமிகு துணை முதலமைச்சர் தலைமையில் உயர்மட்டக்குழு அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை**

அரசாணை (நிலை) எண்.16, நாள்: 25.01.2010

தை – 12,
திருவள்ளுவர் ஆண்டு – 2041,

படிக்க:

1. அரசு ஆணை (நிலை) எண்.632, வருவாய் துறை, நாள் 22.12.2003
2. அரசு ஆணை (நிலை) எண்.278, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 07.07.2004
3. அரசு ஆணை (நிலை) எண்.153, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 10.11.2005
4. அரசு ஆணை (நிலை) எண்.117, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 11.10.2006
5. அரசு ஆணை (நிலை) எண்.23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 18.02.2008
6. அரசு ஆணை (நிலை) எண்.37, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 10.03.2008
7. அரசு ஆணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 23.09.2008
8. அரசு ஆணை (நிலை) எண்.176, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை, நாள் 24.09.2009

படிக்கவும்:

9. உறுப்பினர் செயலர், அடையாறு பூங்கா அறக்கட்டளை (தற்போது சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை) கடித எண்.APT/HLC/2009-10/01, நாள் 15.12.2009 மற்றும் 21.12.2009

* * * * *

**ஆணை:–**

உறுப்பினர்–செயலர், சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை அவர்கள் சென்னை நகர மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த வேண்டியும், சிங்கார சென்னையை உருவாக்க வேண்டியும், சென்னை நகர் மற்றும் அதனைச் சுற்றி பாயும் நதிகள் மற்றும் நீர்நிலைகள் மாசுபடுதலைக் குறைக்க மற்றும் தடுக்க வேண்டியும் பல ஆண்டுகளாக அரசு எண்ணிலடங்கா

நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்றும், இந்த திட்டங்களை நிறைவேற்ற முழுமையாக இறுதி வடிவங்கள் இல்லாததினாலும், நகரைப்பற்றிய முழு புவியியல் நிலவரங்களை அறிந்து கொள்ளாததினாலும் இவைகள் குறைந்த அளவே வெற்றி பெற்றுத்தந்துள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார். தற்போது இந்த பிரச்சினைக்கு ஒருங்கிணைந்த மற்றும் இணக்கமான தீர்வினைக்கான வேண்டி காலவரையறைக்குட்பட்ட முறையில் ஆறு மற்றும் நீர்வழிகளை சீரமைத்திட அரசு விரும்புகிறது.

2. கடந்த நவம்பர் 2009 மாதக் கடைசி வாரத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில், வணக்கத்திற்குரிய சென்னை நகர மேயர் அவர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று சிங்கப்பூருக்கு சென்று அங்கிருந்த நதிகளை சுத்தம் செய்திட அவ்வரசினால் எடுக்கப்பட்ட வழிமுறைகளைப் பற்றியும் அவர்களின் அனுபவம் பற்றியும் கேட்டு ஆராய்வு செய்து வந்தது.

3. அந்தக் குழுவின் அறிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கப்பட்டது. சென்னையில் உள்ள நதிகள் மற்றும் நீர்வழிகளில் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக “சென்னை நதிகள் ஆணைக்குழு” ஒன்று அமைக்க தீர்மானிக்கப்பட்டு, இது சம்பந்தமான தொழில் நுட்ப உதவிக்காக சிங்கப்பூர் பொது வசதி வாரியத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளவும் முடிவுசெய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து, சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள நதிகள் மற்றும் நீர்நிலைகளை மறுசீரமைப்பது குறித்து, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 11–12–2009 அன்று நடந்த கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. அரசு தலைமைச் செயலாளர், மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர், மற்றும் பல்வேறு அரசு உயர்அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர். மேலும் இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு உயர் மட்டக் குழு அமைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

4. அந்தக் குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | மாண்புமிகு துணை முதலமைச்சர் | தலைவர் |
| 2 | மாண்புமிகு அமைச்சர், குடிசை மாற்று வாரியம் | உறுப்பினர் |
| 3 | மாண்புமிகு அமைச்சர், சுற்றுச்சூழல் | உறுப்பினர் |
| 4 | வணக்கத்திற்குரிய மேயர், சென்னை மாநகராட்சி | உறுப்பினர் |
| 5 | தலைமைச் செயலாளர் | உறுப்பினர் |
| 6 | முதன்மைச் செயலாளர், பொதுப் பணித் துறை | உறுப்பினர் |
| 7 | முதன்மைச் செயலாளர், நிதித் துறை | உறுப்பினர் |
| 8 | முதன்மைச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை | உறுப்பினர் |
| 9 | முதன்மைச் செயலாளர், சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை | உறுப்பினர் |
| 10 | செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | உறுப்பினர் |
| 11 | உறுப்பினர் செயலர், சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை | உறுப்பினர் மற்றும் குழுவினைக் கூட்டுபவர் |

தேவையெனக் கருதினால் இந்தக் குழு மேலும் சிலரைக் சேர்த்து துணைக் குழுக்களை அமைத்துக் கொள்ளலாம். இந்தக் குழுவின் செயலகமாக சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை (முன்னாள் அடையாறு பூங்கா அறக்கட்டளை) செயல்படும். சம்மந்தப்பட்ட துறைகள் மற்றும் நிறுவனங்கள் குழுவிற்கு தேவையான உதவிகளைச் செய்யும்.

5. மேலும் கீழ்கண்டவைகள் குழுவின் ஆய்வெல்லைகளாக அமையும் என சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை, உறுப்பினர்–செயலர், தெரிவித்துள்ளார்:

(1) சென்னையிலுள்ள நதிகள் மற்றும் நீர்வழிகளை மறுசீரமைப்பதற்கான காலவரையறைக்குட்பட்ட திட்டங்களை அறிவித்தல்.

(2) சென்னையிலுள்ள நதிகள் மற்றும் நீர்நிலைகளை மறுசீரமைப்பதற்கான முன்னுரிமை அடிப்படையிலான பல்வேறு திட்டங்களை உருவாக்குதல்

(3) ஏற்கனவே செயல்பாட்டிலுள்ள பல்வேறு சுற்றுப்புற சூழல் மறுசீரமைப்புத் திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அவைகளின் முன்னேற்றத்தை கண்காணித்தல்

(4) திட்டமிடுதல், மேம்படுத்துதல், பல்வேறு சுற்றுப்புறச் சூழல் மறுசீரமைப்புத் திட்டங்கள், பணிகள் மற்றும் ஆய்வறிக்கைகளுக்கு நிர்வாக அனுமதி பெறுதல், நிதி ஆதாரங்களை தயார் செய்தல் மற்றும் அதன் செயலாக்கத்தினை கண்காணித்தல்.

(5) திட்டத்திற்காக செயல்படுத்தும் முகவர் அமைப்பினை தீர்மானித்தல், பல்வேறு துறைகள் மற்றும் இதுபோன்ற திட்டங்கள், பணிகள், ஆய்வுகளை மேற்கொள்ளும் இதர அமைப்பினரோடு ஒருங்கிணைந்து செயல்படுதல் மேலும் துறைகளுக்கிடையேயான தடைகளை நீக்குதல்.

(6) இத்திட்டத்தின் நீடித்த மற்றும் ஒட்டுமொத்த தீர்வுக்குத் தேவையான அமைப்பு முறை சீர்திருத்தங்கள் மற்றும்

(7) திட்டத்தினை உருவாக்குதல், முறையான திட்டமிடுதல் மற்றும் நிர்வாக வழிமுறைகள், நீண்ட கால நிதி ஆதாரத்திற்கான நீடித்த மேம்பட்ட வழிமுறைகளை கண்டறிதல் மற்றும் வருவாயின ஆதாரங்களை உருவாக்குதல்.

மேலும் அவசியமென கருதக்கூடிய பல்வேறு பணிகளையும் இந்தக் குழுவிடம் அவ்வப்போது ஒப்படைக்கலாம். தலைவரின் முடிவின்படி தேவைப்படும் பொழுது இந்தக் குழு கூடி விவாதிக்கலாம்.

6. சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை, உறுப்பினர்–செயலர் அவர்கள் மேலே பத்தி 5 ல் கண்டுள்ளவாறு சென்னை நதிகள் மற்றும் நீர்வழிகள் மறுசீரமைப்புத் திட்டத்திற்காக மாண்புமிகு துணை முதலமைச்சர் தலைமையில் ஒரு உயர் மட்டக் குழுவினை அமைக்க அரசின் ஆணை வேண்டியுள்ளார்.

7. உறுப்பினர்–செயலர், சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை அவர்களின் கோரிக்கையினை அரசு கவனமுடன் பரிசீலித்து சென்னை நதிகள் மற்றும் நீர்வழிகள் மறுசீரமைப்புத் திட்டத்திற்காக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கீழ்கண்டுள்ளவாறு ஓர் உயர் மட்டக் குழுவினை அமைத்து அரசு ஆணையிடுகிறது:

| | | |
|---|---|---|
| 1 | மாண்புமிகு துணை முதலமைச்சர் | தலைவர் |
| 2 | மாண்புமிகு அமைச்சர், குடிசை மாற்று வாரியம் | உறுப்பினர் |
| 3 | மாண்புமிகு அமைச்சர், சுற்றுச்சூழல் | உறுப்பினர் |
| 4 | வணக்கத்திற்குரிய மேயர், சென்னை மாநகராட்சி | உறுப்பினர் |
| 5 | தலைமைச் செயலாளர் | உறுப்பினர் |
| 6 | முதன்மைச் செயலாளர், பொதுப் பணித் துறை | உறுப்பினர் |
| 7 | முதன்மைச் செயலாளர், நிதித் துறை | உறுப்பினர் |
| 8 | முதன்மைச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை | உறுப்பினர் |
| 9 | முதன்மைச் செயலாளர், சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை | உறுப்பினர் |
| 10 | செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | உறுப்பினர் |
| 11 | உறுப்பினர் செயலர், சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை | உறுப்பினர் மற்றும் குழுவினைக் கூட்டுபவர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசு செயலாளர்.

பெறுநர்:
உறுப்பினர்–செயலர், சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை, தியாகராய நகர், சென்னை–17,
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம், சென்னை – 1
மாநில கணக்காயர், சென்னை – 18
இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, சென்னை – 108
<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர் சென்னை – 9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9
மாண்புமிகு நிதி அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு சுற்றுசூழல் அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9
மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதி கட்டுப்பாடு அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9
முதன்மைச் செயலாளர் / செயலாளர், (நிதி/பொதுப்பணி/ வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாட்டுத் / நெடுஞ்சாலை மற்றும் துறைமுகங்கள் / சுற்றுசூழல் மற்றும் வனம்) துறை, சென்னை – 9
நிதித்துறை, சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலாளரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2/வரவு செலவு) துறை, சென்னை – 9
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்